**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 114/2019**

பெயர் : செல்லதுரை P.W.4. Cross

த/பெ. : சின்னமணி

தேதி : 02.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

1. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் முரளிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சாகுபடி பாத்தியம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் 3வது சாட்சி ஆவேன்.

2. வாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. வாதியும் நானும் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். வாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி தாவா சொத்தில் வீடு கட்டி வாழை, தென்னை சாகுபடி செய்து 30–40 வருடங்களாக வசித்து வருவதால் அவரது அனுபவத்தில் இருப்பதாக சொல்கிறேன். தாவா சொத்திற்கு தமிழக அரசால் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் கவிதா பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அந்த பட்டா எந்த அதிகாரி வழங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 2ம் வாதி கவிதா பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை கோட்டாட்சியர் அவர்கள் ரத்து செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். எனக்கு இந்த வழக்கு பற்றி விபரம் தெரியாது என்றாலும், வாதி எனது தெருவை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விருப்ப சாட்சி என்பதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.